**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 351/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. சாந்தி |
| Father's Name/Husband Name: | திரு. தர்மலிங்கம் |
| Village : | நத்தக்காடு |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 59/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது நத்தக்காடு கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1ம் எதிரி என்னுடைய மூத்த சகோதரர் சேகர் என்பவரின் மகன் ஆவார். 2ம் எதிரி எனது அண்ணன் சேகரின் மனைவி ஆவார். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு சொந்தமான வயலில் பருத்தி பயிரிட்டு வைத்திருந்தோம். அந்தக் காடு என் தம்பிக்கு பாகமாக பிரிந்த சொத்தாகும். அதில் நான் பருத்தி பயிரிட்டிருந்த போது அன்றைய தினம் மாலை 5 மணியளவில் 1ம் எதிரி அர்ஜீன் என்பவருடைய ஆடுகள் மேய்ந்தது. நான் ஆடுகளை விடக்கூடாது பருத்தி எடுக்க வேண்டும் என்று அர்ஜீன் என்பவரிடம் சொன்னேன். அதற்கு 1ம் எதிரி உனக்கு இங்க என்ன வேலை என்று சொல்லி தேவிடியா என்று அசிங்கமாக பேசியும் குச்சியை எடுத்து என்னை இடது முன் கை மற்றம் முதுகு பகுதியில் அடித்ததில் எனக்கு மயக்கம் வந்து கீழே விழுந்துவிட்டேன். அப்போது 2ம் எதிரி பக்கத்தில் பார்த்துக் கொண்டு இருந்தார் அவர் ஒன்றும் செய்யவில்லை. 2ம் எதிரி என்னைக் காட்டுக்கு வரக்கூடாது உனக்கு இங்கே என்ன வேலை என்று சொன்னார். பின்னர்

108 ஆம்புலன்சு மூலமாக மருத்துவமனைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். என்னை அடித்து போட்டுவிட்டு 1ம் எதிரி அங்கிருந்து செல்லும்போது ஒன்றும் சொல்லவில்லை அவர் காட்டிற்கு சென்றுவிட்டார். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அது அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். ஒரு வாரம் நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பமிட்ட புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி, மாதம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு சொல்லத் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் காடு என்றால் சரிதான். சம்பவத்தை நேரடியாக யாரேனும் பார்த்தாக எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் எனது அண்ணன் பார்த்தார். சம்பவத்தில் பயன்படுத்திய குச்சியை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை எதிரிகள் எங்கேயோ தூக்கி போட்டுவிட்டார்கள். மருத்துவரிடம் தெரிந்த ஒரு நபர் தான் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் உடலில் எந்த இடத்தில் அடித்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் ஆபாசமான வார்த்தைகளை பேசியபோது அருகில் யார் இருந்தார்கள் என்றால் யாருமில்லை. எதிரிகளுக்கும் எங்களுக்கும் நிலம் சம்மந்தமான பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது அண்ணன் ஜீவா என்பவர் சம்பவத்தை பார்த்தார். சம்பவயிடத்தில் நானும் எனது அண்ணா ஜீவா மட்டும் தான் இருந்தோம் என்றாலும் எதிரிகள் இருந்தார்கள் என்றாலும் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் ஆபாச வார்த்தைகளால் பேசவில்லை என்றாலும் 1ம் எதிரி என்னை அடிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.